# தயாநிதிமாறன் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் உங்கள் கட்சிக்கு வரும் கணமே தூய்மையாகி விடுகிறார்கள்! அது என்ன பார்முலா? இது மக்களின் தீர்ப்பு அல்ல, உங்கள் கட்டாயத் தீர்ப்பு!

மத்திய பிரதேசத்தில் என்ன செய்தீர்கள், காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் விலைக்கு வாங்கப்பட்டதை உறுதி செய்தீர்கள். முந்தைய கர்நாடக சட்டசபையில் என்ன செய்தீர்கள்? எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கினீர்கள். அந்தப் பணம் எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை! நீங்கள் ஊழல் செய்யவில்லை என்று சொல்கிறீர்கள், அதனால் நான் கேட்கிறேன், இதை எங்கே பெறுகிறீர்கள்? உண்மையைப் பேசும்போது சுடுகிறதோ?

இந்த திருத்தச் சட்டத்திற்கு எதிராக, திமுகவின் நிலைப்பாட்டை நான் பேசுகிறேன். ED இயக்குநரின் பதவிக் காலத்தை மூன்று முறைக்கு மேல் நீட்டிக்க முடியாது என்றும், ஜூலை 31 அவரது பதவிகாலத்தின் முடிவு தேதி என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால் நீங்கள் திரும்பிச் சென்று, நிர்வாக அதிகாரத்தில் மிகவும் வல்லமை வாய்ந்தவர் என்றும், பத்வாவை வழங்கக்கூடிய ஒரே மனிதர் அவர்தான் என்றும் கூறி நீட்டிப்பு கேட்டீர்கள்! ஆகவே, நிர்வாகத்தின் முக்கியத்துவம் உங்களுக்குத் நன்றாகவே தெரியும். அது ஒரு பொம்மை அல்ல, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் கைகளில் தான் இருக்க வேண்டும்.

நிர்வாக சேவைகள் தில்லி அரசின்கீழ் வர வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகத் தெரிவித்து தீர்ப்பு வழங்கியது. எனவே நீங்கள் உடனடியாக ஒரு அரசாணையைக் கொண்டு வந்தீர்கள்.

சட்டங்களை இயற்றும் உச்ச அதிகாரம் பாராளுமன்றத்திற்கே என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அதனால்தான் நாம் சட்டமியற்றுபவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். இங்கு ஏதேனும் சட்டம் இயற்றப்படும்போது, பேசுவதற்கு எங்களது உரிமையை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும், நீங்கள் தவறான சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்றால், நாங்கள் அதைச் சொல்ல வேண்டும்.

**டெல்லி அரசை கட்டுப்படுத்த நினைக்கிறீர்கள்!**

உங்கள் நோக்கங்கள் இங்கே மிகத்தெளிவாக உள்ளன, நீங்கள் டெல்லி அரசைக் கட்டுப்படுத்த விரும்புகிறீர்கள். அது ஏன்? உங்களிடம் வரும்போது மட்டும், நிர்வாகப் பணியாளர்கள் நீட்டிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்.

ஆம் ஆத்மி அளித்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்று உங்கள் உறுப்பினர் ஒருவர் பேசினார். அது எப்படி நிறைவேற்றப்படும்? நீங்கள் எப்போதும் அதிகாரிகளை திணறடிக்கிறீர்கள்! அவற்றில் எதையும் செயல்பட நீங்கள் அனுமதிக்கவில்லை. அதிகாரிகள் செயல்படாமல் எப்படி நிறைவேற்றுவார்கள்? இந்த ஆம் ஆத்மி அரசாங்கம் ஒருபோதும் வாக்குறுதிகள் நிறைவேற்றவில்லை என்று சொல்ல, இதை ஒரு தேர்தல் மேடையாக பயன்படுத்த விரும்புகிறீர்கள்.

மேலும் கூட்டணி பற்றி நீங்கள் பேசாதீர்கள்! இதைத்தான் தமிழில் "சாத்தான் வேதமோதுகிறது" என்று கூறுவார்கள்.

நீங்கள் புனிதமற்ற கூட்டணியில் ஈடுபட்டுள்ளீர்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தையும் உங்கள் கட்சியை மட்டுமே கவனித்துக்கொள்ளுபவர்கள். எங்கள் கூட்டணிக் கட்சிகளை எப்படிக் கவனித்துக் கொள்வது என்பது எங்களுக்குத் தெரியும், இந்தியா கூட்டணி மிகவும் வலுவாக உள்ளது. அடுத்து, 2024, நாங்கள் ஆட்சியில் இருப்போம், நீங்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்வீர்கள்! நீங்கள் செய்த துஷ்ப்ரயோகமெல்லாம், நாங்கள் செய்ய மாட்டோம். ஆனால், உங்களைப் போல் அல்லாமல், சிபிஐ, ஈடி மற்றும் வருமான வரித்துறை ஆகியவை ஒழுங்காக நடந்துகொள்வதையும், தங்கள் வேலையைச் சரியாகச் செய்வதையும் நாங்கள் உறுதி செய்வோம். எதைச் செய்தாலும் அதைச் சரியாகச் செய்வார்கள், அந்த நேரத்தில் கடைசியாகச் சிரிப்பது யார் என்று பார்ப்போம்.

> இந்த திருத்தச் சட்டத்திற்கு எதிராக, திமுகவின் நிலைப்பாட்டை நான் பேசுகிறேன். ED இயக்குநரின் பதவிக் காலத்தை மூன்று முறைக்கு மேல் நீட்டிக்க முடியாது என்றும், ஜூலை 31 அவரது பதவிகாலத்தின் முடிவு தேதி என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால் நீங்கள் திரும்பிச் சென்று, நிர்வாக அதிகாரத்தில் மிகவும் வல்லமை வாய்ந்தவர் என்றும், பத்வாவை வழங்கக்கூடிய ஒரே மனிதர் அவர்தான் என்றும் கூறி நீட்டிப்பு கேட்டீர்கள்!

தாங்கள் கொண்டு வரும் சட்டத்தில் 3ஏ பிரிவு இருக்காது என்பதை உறுதி செய்திருக்கிறார்கள்.

உள்துறை அமைச்சர் தனது அறிக்கையில், 3 பேர் கொண்ட குழுவை உருவாக்குவதை கட்டாயமாக்குகிறது என்றும், டெல்லி நாட்டின் மிக முக்கியமான பகுதியாக இருப்பதால் இந்த சட்டம் கொண்டு வரப்படுகிறது, அனைத்து வெளி நாடுகளும் தங்கள் தூதரகங்களை இங்கு வைத்துள்ளன, பாதுகாப்பு மிகவும் முக்கியமானது, உள்ளூர் அரசாங்கம் வந்து தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் கூறினார்

ஐயா, எப்படியும் தேசிய தலைநகர் பிராந்தியத்தின் பாதுகாப்பு உங்களிடம்தான் உள்ளது. அதற்கு யார் பொறுப்பு? உள்துறை அமைச்சகம், மாநில அரசு அல்ல. மேலும் சட்டம் ஒழுங்கில் ஏதேனும் தவறு நடந்தால் அதற்கு நீங்களே பொறுப்பு, அதற்கு வேறு யாரும் பொறுப்பல்ல. உங்கள் பொறுப்புகளில் இருந்து பின்வாங்க முயற்சிக்காதீர்கள்! டெல்லியில் பலாத்காரங்கள் நடக்கின்றன என்றால் அதற்கு காரணம் உங்கள் சட்டம் ஒழுங்கு பலவீனமாக உள்ளது. டெல்லியில் கொள்ளை நடக்கிறது என்றால் அதற்கு காரணம் உங்கள் சட்டம் ஒழுங்கு சரியில்லை!

இப்போது அவர்கள் அமைத்த குழுவைப் பார்ப்போம். இந்தக் குழுவில் தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் முதல்வர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மூன்று உறுப்பினர்களில் இருவரை ஒன்றிய அரசு நியமிக்கிறது. கோரம் (Quorum) இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே! நாளை, முதல்வர் வெளியூர் செல்லலாம் அல்லது வெளிநாடு செல்லலாம்... எந்த அதிகாரியை நியமிக்க வேண்டும் என்பதை இந்த இருவர் முடிவு செய்யலாம். அதிலும், இத்தனைக்குப் பிறகும், மூவரும் ஒன்றாக அமர்ந்து, ஏதாவது ஒரு அதிசயத்தின் மூலம், ஒரு முடிவுக்கு வந்தாலும், அந்த முடிவை, லெப்டினன்ட் கவர்னரால் முறியடிக்க முடியும். அதனால் என்ன பயன்? நீங்கள் அதிகாரங்களை வழங்குவதாகச் சொல்கிறீர்கள் ஆனால் அது இல்லை! குழந்தை அழுகையை நிறுத்துவதை உறுதிசெய்ய இனிப்பைக் காட்டுகிறீர்கள், பின்னர் இனிப்பைத் திரும்பப் பெறுகிறீர்கள்.

**ஆளுநர்களை அரக்கர்களாக மாற்றி வருகிறீர்கள்!**

கடந்த 9 ஆண்டுகளாக, நீங்கள் ஆளுநர்களை அரக்கர்களாக மாற்றி வருகிறீரகள். திமுக எப்போதும் ஆளுநர் நியமனத்திற்கு எதிரானது, எந்த மாநில அரசுக்கும் ஆளுநர் தேவையில்லை என்பதை மிகத் தெளிவாகக் கூறி வருகிறது. தி.மு.க. நிறுவனர் பேரறிஞர் அண்ணா, ஆட்டுக்கு தாடி தேவையில்லை என்பது போல, மாநிலத்துக்கும் ஆளுநர் தேவையில்லை என்று கூறியுள்ளார். 13 மசோதாக்கள் ஆளுநர் மாளிகையில் கிடப்பில் போடப்பட்டுள்ளன. என்ன காரணங்களுக்காக, யாருக்கும் தெரியாது. அதேசமயம் கவர்னரிடம் ராஜ்பவனின் ஆடம்பரங்கள் உள்ளன.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து தயாநிதி மாறன் பேசிக்கொண்டிருக்கும்போதே, பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரை பேசவிடாமல் சத்தமிட்டு தடுத்தனர். இச்செயலை கண்டித்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா2023 தொடக்க நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் சுற்றுலாத்துறை இயக்குநர் / தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி (பென்னாகரம்), எஸ்.பி.வெங்கடேஷ்வரன் (தருமபுரி), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஏராளமானோர் உள்ளனர்.

### கவிப்பேரரசு வைரமுத்து தலைமை! பொன்னமராவதி தெற்கு ஒன்றிய, பேரூர் தி.மு.க. சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்! அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கிறார்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் வாழ்த்துரை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

*புதுக்கோட்டை ஆக.5*

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், பொன்னமராவதி தெற்கு ஒன்றிய, பேரூர் தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் இன்று (05.08.2023, சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் . பொன்னமராவதி ஆசை ஜெயம் திருமண மஹாலில் பொன்னமராவதி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.அடைக்கலமணி தலைமையில் நடைபெறுகிறது. பொன்னமராவதி பேரூர் கழகச் செயலாளர் அ.அழகப்பன் அனைவரையும் வரவேற்கிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி கருத்தரங்கை துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

எஸ்.ஜெயராமன், அ.முத்து, பொன்.ராமலிங்கம், அழகு சிதம்பரம், வி.ஆர்.இளையராஜா, ஆர்.கணேசன், சுதா அடைக்கலமணி, தனலட்சுமி அழகப்பன், சுந்தரி அழகப்பன், அ.ராமு, பெரி.அழகப்பன், கா.வெங்கடேஷ், மு.பாண்டியன், அ.மு.பழனிச்சாமி, ஆர்.விஜயா தி.சுப்பையா, சி.மணி, எம்.சிக்கந்தர், எம்.பாலசுப்பிரமணியன், அ.தட்சணாமூர்த்தி, ஆர்.காளிதாஸ், ஆர்.விகாஸ், முரளிசுப்பையா, எம்.முத்துக்குமார், ஆர்.செல்வக்குமார், தி.ராஜா, மீனாட்சி மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

ஆளுமை அரசர் கலைஞர் என்னும் கருத்தரங்கம் நடைபெறுகிறது. கருத்தரங்கிற்கு கவிஞர் வைரமுத்து தலைமை தாங்குகிறார். 'கலைஞரின் எழுத்தாளுமை' என்ற தலைப்பில் கவிஞர் நந்தலாலா, 'கலைஞரின் கலையாளுமை' என்ற தலைப்பில் ஆலங்குடி வெள்ளைச்சாமி,'கலைஞரின் சொல்லாளுமை' என்ற தலைப்பில் கவிஞர் கவிதா ஜவகர் ஆகியோர் பேசுகின்றனர். காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , புதுக்கோட்டை

வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றார்கள்.

இந்நிகழ்வுகளில் அறந்தாங்கி இராஜன், பெரியண்ணன்அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், எம்.எம். அப்துல்லா எம்.பி, த.சந்திரசேகர், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை, அ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன், க.அடைக்கலம், அ.ஸ்ரீதேவி, ஜெ.அபுதாஹீர், த.மணிராஜன், சு.சண்முகம், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், க.ராஜேந்திரன், அ.செந்தில்குமார், மேகலா முத்து, சீனி.பழனியப்பன், என்.வீரைய்யா, ஆர்.வி.செல்வம், கே.எம்.சுப்பிர மணியன், சு.கலைவாணி தேவி,

அ.சின்னையா, க.ச.த. தென்னரசு, மணி அண்ணாத்துரை, ம.மணி, அ. ராமச்சந்திரன்

சி.விஜயகுமார், அ.ராமன், அ.கருப்பையா, சண்முகம், சோம.தேனிமலை, ப.விஜயன், கை. நாக ராஜன் , எஸ்.செல்வம், அ.அடைக்கலம், சுப. சின்னையா, டி.எம்.கே.சுப்பிரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி நகராட்சிக்குட்பட்ட சேங்கைத் தோப்பில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் பத்து லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடையை மக்கள் பயன்பாட்டிற்கு புதுக்கோட்டை எம்.எல்.ஏ. டாக்டர் வை.முத்துராஜா திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் புதுக்கோட்டை நகர் மன்றத் தலைவர் திலகவதி செந்தில், நகர்மன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி, பால்ராஜ் கவிவேந்தன், தி.மு.க. வட்டச் செயலாளர் முத்து கருப்பன் மற்றும் அரசு அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தென்காசியில் பாக முகவர்கள் கூட்டம்!

*தென்காசி, ஆக. 5 -*

தென்காசி வடக்கு மாவட்டம் மேலநீலிதநல்லூர் தெற்கு, கிழக்கு, மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் குருக்கள்பட்டி அபிஷேக திருமண மஹாலில் ஒன்றியத்திற்கு உட்பட்ட (BLA2) பூத் கமிட்டி முகவர்கள் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் மேலநீலிதநல்லூர் ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை, வெற்றிவிஜயன், ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரமகுரு, மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், புனிதா, ராஜதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் மகேஸ்வரி, தேவா, சங்கரன்கோவில் நகரச் செயலாளர் பிரகாஷ், உள்பட மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கிண்டி எம். கோபால்
### ஆகஸ்ட் 5 (1985)



**இளம்வயதில் திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றியவர்.**

**1959ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தேர்தலில் கிண்டி கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரை 'கிண்டி கோபால்' என தலைவர் கலைஞர் அவர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.**

**சட்டப்பேரவை உறுப்பினராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்தவர்.**

**1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

**கோவை வடக்கு மாவட்டம், காரமடை நகரத்தைச் சேர்ந்த குட்டி (எ) கிருஷ்ணமூர்த்தி, வி.ரங்கசாமி, ஆர்.செல்வராஜ், மு.பிரதாப் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 03-08-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஆர். இராமசாமி
### ஆகஸ்ட் 5 (1971)



**திராவிட இயக்க காலத்திலிருந்து அண்ணா – கலைஞர் ஆகியோரின் கலையுலகப் பயணத்தில் கிடைத்த மாணிக்கம். நடிப்பிலும், பாடுவதிலும் சிறந்து விளங்கியவர். 'நடிப்பிசைப்புலவர்' என நாட்டு மக்களால் அழைக்கப்பட்டவர்.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். கழகப் பொதுக்குழு உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**தி.மு.கழக துவக்க காலம் முதல் கழகத்திற்காக கலையுலகில் ஈட்டிய புகழையும், பொருளையும் அர்ப்பணித்தவர்.**

**தேர்தல் களத்தில் கழகம் ஈடுபட்ட வேலைகளில் தீவிரமாகப் பிரச்சாரப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.**

**"பழகுதற்கு இனியவர், பகுத்தறிவுச் சுடர், பாசத்திற்குரிய நண்பர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**